அரசுக்குத் தெரிவித்துக் கொண்டு வருகிறோம். நான் முதலி லேயே குறிப்பிட்டேன். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் ஏற்பட்ட ஒப்பந்தமாக இருப்பதால் மத்திய அரசுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். கச்சதீவைப்பற்றிச் சொன்னார்கள். 1974ஆம் ஆண்டிலேயே அதைப்பற்றி எல்லா அரசியல் கட்சிகளும் ஒருமித்த கருத்தைத் தெரிவித்த பிறகுதான் இந்த ஒப்பந்தம் ஏற்படுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைமை ஏற்பட்டது. இப்போது நாம் ஒப்பந்தத்திற்கு மதிப்பு அளிக்கக்கூடிய கட்டத்திலே இருக்கிறோம். 60 பேர்களை கைது செய்தார்கள். அவர்களில் இரண்டு பேர்களைத் தவிர மற்றவர் களையெல்லாம் விட்டு விட்டார்கள். அவ்வப்போது இந்தப் பிரச்சினை குறித்து மத்திய அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். எப்படி இறந்துபட்டார், இறந்து பட்டாரா இல்லையா என்று தெளிவாக்கப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. காரணம் ஒருவேளை உயிரோடு இருந்தால் என்ன ஆகும் என்று தான் அதிகாரிகள் நினைக்கிறார்கள்.

[முற்பகல் 10-50]

தெளிவான நிலைமை ஏற்பட்டதற்கு பிறகு அவர்களுக்கு வழங்கப் படவேண்டிய நிவாரண நிதி வழங்கப்படும். ஆனால் மற்றவை களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டார்கள். அவற்றைப் பற்றித் தனியாகக் கேட்டால்அதுபற்றி விவரங்கள் அளிக்கப்படும்.

(ஆ) திருவில்லிப்புத்தூர் பகுதியில் ஆடுகள் துள்ளு வியாதியால் பாதிக்கப்பெறுவது.

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவரவர்களே, '' திருவில்லிபுத்தூர் தொகுதி சுந்தர பாண்டியம் கிராமத்தில் நூற்றுக் கணக்கான ஆடுகள் இறக்கக் காரணமான துள்ளு வியாதியை (என்ட்ரோடாக்சிமியா) ஒழிக்க வேண்டிய அவசியம் குறித்து '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரவைமுன் நான் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

என்ட்ரோடாக்சீமியா (Enterotoxcemia) என்னும் நோய் ஆடுகளிடைய திருவில்லிபுத்தூரில் உள்ள குன்னூரில் தோன்று வதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

நோய்வாய்ப்பட்ட ஆடுகளுக்கு கால்நடை பராமரிப்புத் துறையினர் சிகிச்சையளித்து மேற்படி நோயால் பாதிக்கப்படக்கூடிய ஆடுகளுக்கு தடுப்பூசி போட்டதன் விளைவாக தற்போது மேற்படி நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 15—11—1980-க்குப் பிறகு இந்நோயால் ஆடுகள் ஏதும் இறக்கவில்லை.

ஆடுகளுடன் ஆடு மேய்ப்பவர்கள் இடம் விட்டு இடம் மேய்ச்சலுக்காகச் செல்வது வழக்கம். கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் கடலாடி பகுதிகளில் இருந்த ஆடுகள் 1980 ஆம் ஆண்டில் அக்டோபர்—நவம்பர் மாதங்களில் திருவில்லிபுத்தூரில் உள்ள குன்னூர் பகுதிகளில் மேய்ந்து கொண்டிருந்தன. இவ்வாடுகளில் மிகச் சொற்பமான அளவில் கீழ்க்கண்ட கிராமங்களில் இறந்துவிட்டன. அவையாவன :—குன்னூர், சக்கம்பட்டி, செம்பத்தையன்கால், சுந்தரபாண்டியம் மற்றும் கிருஷ்ணன் கோவில்.

இவ்விபரம் கால்நடை பராமரிப்புத் துறைக்கு 14—11—1980 அன்று தெரிவிக்கப்பட்டது. குன்னூரைச் சார்ந்த உதவி கால்நடை மருந்துவர் மற்றும் உதவி கால்நடை இயக்நர் ஆகியோர்கள் இவ்வியாதிகளை ஆய்வு செய்யும் பொருட்டு மேற்படி இடங்களைப் பார்வையிட்டு தேவையான விபரங்களைச் சேகரித்து இறந்துவிட்ட ஆடுகளை பரிசோதனை செய்து மேற்படி வியாதியினை என்ட்ரோடாக்சீமியா என முடிவு செய்தனர். மேற்படி நோயால் பாதிக்கப்பட்டு உயிருடன இருக்கும் ஆடுகளுக்கு சிகிச்சை செய்து மற்ற ஆடுகளுக்கு இந்நோய் பரவாமல் தடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

என்ட்ரோடாக்சீமியா என்ற வியாதியால் பாதிக்கப்பட்ட 18 ஆடுகளில் 14 ஆடுகள் இறந்துவிட்டன. சிகிச்சைக்குப் பின்னர் மற்ற 4 ஆடுகள் முழுவதும் குணமடைந்துவிட்டன.

1,300 ஆடுகளுக்கு நவம்பர் 1980-யில் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. 15—11—1980-க்குப் பிறகு இந்நோயால் ஆடுகள் ஏதும் இறக்கவில்லை. மேற்கொண்டும் தடுப்பூசிகள் போடுவதற்காக 30—12—1980-ல் இராணிப்பேட்டையிலிருந்து 9,000 டோசஸ் தடுப்பூசி மருந்துகள் வரவழைக்கப்பட்டன. தீவிர முறையில் ஆடுகளுக்குச் சிகிச்சையளிக்கும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நோய் பரவுவதைத் தடுக்கும் பொருட்டு ஆடுகளை மேய்ச்சலுக்காக விடும் நேரத்தைக் குறைக்கும்படி ஆட்டுச் சொந்தக்காரர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். சரியான நேர சிகிச்சையும் நோய் தடுப்பு ஊசியும் போடப்பட்டதால் நோய் பரவுவது தடுக்கப்பட்டுள்ளது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்த குறிப்பில் இந்தத் துள்ளு வியாதியால் பாதிக்கப்பட்ட 18 ஆடுகளில், 14 ஆடுகள் இறந்து விட்டதாகத் தெரிகிறது. இது கிட்டத்தட்ட 80 விழுக்காடு ஆகும். இந்த வேகத்தில் போனால் ஆட்டு இனமே அழிந்து போய்விடுமே. இது பெரிய இழப்பு ஆயிற்றே. அதற்கு தடுப்பு ஊசி போடப்பட்டதா அல்லது மருந்து கண்டுபிடிக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாணபுமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆடுகள், குறிப்பாக இளம் ஆடுகள் புரதச் சத்து மிக்க தீவனம் அதிகப்படியாகச் சாப்பிடுவதால் இரைப்பையில் சுரக்கும் அமிலங்கள் மிதப்பட்டு வியாதிக்கான நுண் கிருமிகள் மிக அதிகமாகப் பெருகி, அவைகள் வெளிப்படுத்தும் நச்சுப் பொருள்கள் ரத்தத்தில் கலந்து மிக விரைவில் மரணம் ஏற்படுகிறது. ஆகையால், இந்தத் துள்ளு வியாதி தொத்து நோய் அல்ல; அது அதிகமாகச் சாப்பிடுவதன் வாயிலாகத்தான் இந்த நோய் ஏற்படுகின்றது. இந்த நோய் வருவதற்கு முன் தடுப்பு ஊசிகள் போட முடியாது. மற்ற ஆடுகளுக்குப் பரவுவதற்கு முன் மற்ற ஆடுகளுக்கும் தடுப்பு ஊசிகள் போடுவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

6. அறிக்கை அளித்தல்.

பொது கணக்குக் குழு

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவரவர்களே, '' 1974–75 மற்றும் 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் அறிக்கை(வருவாய் வரவினங்கள்) குறித்த பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை (இரண்டாவது அறிக்கை) '' அளிக்கிறேன்.

3. ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(ஆ) ஆளுநர் உரைமீதான விவாதம் நடைபெறுகையில் சட்ட முன் வடிவுகளை அறிமுகம் செய்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அரசினர் சட்ட முன்வடிவுகள் அறிமுகம்.

டாக்டர் கே. சௌரிராஜன்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு எடுக்கப்படுவதற்கு முன்னால் இப்படி அரசினர் சட்ட முன்வடிவுகளை அறிமுகம் செய்வது முறையா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். பல தடவை இப்படி நடந்து விட்டது. நாங்கள் யாராவது